1992 மார்ச் 26]

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாயில் மரம் முசிறி தொகுதி, பெத்தநாய்ப் பட்டி நேரு நினைவுக் கல்லூரியில் இருக்கிறது. அங்கே 100 மரங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். முசிறிக்கு அருகே முசிறி-திருச்சி நெடுஞ்சாலையில் மண் வளமும், நீர் வளமும் உள்ள காவிரி படுகையில் இந்த மரத்தை வளர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலிருந்து வந்த வல்லுநர்கள் திருச்சியின் அருகிலே உள்ள காவிரியினுடைய படுகைக் கரைகளில் இந்த மரங்கள் நன்கு வளரும் என்ற கருத்தினை தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அந்த மரங்கள் வளர்ப்பது பற்றி அரசினுடைய ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாமாயில் எடுக்கின்ற ஃபேக்டரி வைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 10 ஆயிரம் ஏக்கரிலாவது கல்டிவேஷன் செய்தால் தான் முடியும் என்று மலேசியாவிலிருந்து வந்தவர்களும், பல நிபுணர்களும் சொல்கிறார்களே, நாம் 100, 200 மரங்களை வைத்தால் சரியான முறையிலே எண்ணெய் எடுக்கமுடியுமா? ஆகையால், குறைந்த பட்சம் 10 ஆயிரம் ஏக்கரில் உடனடியாக அவற்றைப் பயிர் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையாகவே, 500 ஹெக்டேர் மரங்களுக்கு தகுந்த அளவில் இந்த ஆலையை நிறுவ முடியும். இந்த அளவில் இன்றைய தினம் கேரள மாநிலத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையினால் தமிழகத்தில் 2250 ஹெக்டேரில் தனியார் பண்ணைகள் அமைப்பதற்கும், அரசாங்கம் 250 ஹெக்டேரில் வளர்ப்பதற்கும் திட்டங்கள் தீட்டி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 373, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

1992 மார்ச் 26]

சத்துணவுத் திட்டத்திற்கு நிரந்தர டிரஸ்ட்.

*4484 திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலம் மற்றும் தொகை அன்பளிப்பாக பொதுமக்களிடம் பெற்று அதன் மூலம் நிரந்தர டிரஸ்ட் ஏற்படுத்தும் திட்டத்தை செயல் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே ஒரு அமைப்பு இருப்பதால் இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொதுமக்களும் சமூக சேவை சங்கங்களும், தொழில் அதிபர்களும், திருக்கோவில்களின் உபரி நிதி மூலமாக நிரந்தர திட்டம் ஏற்பாடு செய்தால், பாத்திரங்கள் வாங்குவதற்கும், குழந்தைகள் அமர்வதற்கு பென்ச் போன்ற பொருட்கள் வாங்குவதற்கும், கட்டடம் கட்டுவதற்கும், அவற்றை ரிப்பேர் செய்வதற்கும் உதவியாக இருக்கும். அரசுக்கு செலவும் குறையும்; அந்த சத்துணவுக் கூடங்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். எனவே இதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நன்கொடையாளர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள் அளிக்கின்ற நிதியை பணமாகவோ அல்லது வங்கிக் காசோலையாகவோ அனுப்பலாம். அதைப் பெறுவதற்காக இந்த சத்துணவுத் திட்டம் உருவாக்கப்பட்டபோது 'தாரா' என்கின்ற அமைப்பு ஊரக வளர்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இயங்குகின்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதிலே பணத்தை நன்கொடையாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைத்தால், அதை 'தாரா' என்கின்ற அமைப்பிலே போட்டு அதன் மூலமாக இந்த அரசு செலவழிக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் ஆரம்பித்த சத்துணவுக் கூடத்தில் பொங்கல், தீபாவ

[1992 மார்ச் 26

ஆகிய நன்நாட்களில் இனிப்பு வழங்குவதைப்போல, தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புரட்சித் தலைவர் அவர்களின் பிறந்த நாளன்றும், தமிழகத்தினுடைய தங்கத் தலைவி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்தநாளன்றும் இனிப்பு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆரம்பித்த இந்த சத்துணவுத் திட்டத்தை மிகச் செம்மையோடும் சீரோடும், சிறப்போடும் நடத்த வேண்டுமென்று இன்றையதினம் அதற்கு அரிய அறிவுரைகளை வழங்கி வருகிற மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்த நாளன்று இனிப்புகள் வழங்குவதற்கு நிச்சயமாக இந்த இலாகா பரிசீலனை செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374 திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

374—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை வசதி.

* 4290—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கல்லுக்கட்டு—பைத்தூர், கல்லுக்கட்டு—கீரிப்பட்டி வரை சாலை வசதி ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்கட்டிலிருந்து பைத்தூருக்கும், கீரிப்பட்டிக்கும் இதுவரை அறவே சாலை வசதி இல்லாததால் கல்லுக்கட்டு குருவும் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மலைவாழ் மக்களும், அவர்களுடைய 30-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளும், பிரசவத்திற்காக கொண்டு செல்லப்படும் தாய்மார்களும்